Registered as a News paper in Ceylon ★ ★

# ஈழநாடு

EELA NADU

போன் 399 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 4

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 9 ஆம் நாள் ஷவ்வால் 6 (21-2-64) வெள்ளிக்கிழமை இதழ் 11

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும் வேண்டிய பசளை பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை

அளவெட்டி.

# சர்வகட்சி மகாநாடு அடுத்த வாரம் கூடும்

## தமிழரசுக்கட்சியின் 5 அம்ச திட்டமே அடிப்படை

### மந்திரிசபை யோசனைக்கு அரசியல் தலைவர்கள் வரவேற்பு



கொழும்பு, வியாழன்

சர்வகட்சித் தலைவர்கள் அனைவரையும் அழைத்து வட்டமேசை மகாநாடொன்று கூட்டி மொழிப்பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்ற மந்திரிசபையின் யோசனைக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

தமிழரசுக் கட்சியின் 'குறைந்தபட்ச' கோரிக்கையை அடிப்படையாக வைத்து மொழிப் பிரச்னைக்கும் சிறுபான்மையோர் பிரச்னைக்கும் தேசிய ரீதியில் சுமுகமான தீர்வுகாணும் நோக்கத்துடன் சர்வகட்சி மகாநாடொன்று அடுத்தவார மத்தியில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. சர்வகட்சி மகாநாட்டை 'இனியும் தாமதிக்காமல் கூட்டவேண்டும்' என்ற மந்திரிசபையின் தீர்மானத்துக்கிணங்க மகாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

வட்டமேசை மகாநாடு சம்பந்தமாக அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில், வட்டமேசை மகாநாட்டை கூட்டி மொழிப்பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்ற யோசனையைத் தாம் மிகவும் வரவேற்பதாகக் கூறினர். "மொழிப்பிரச்னையைச் சமரசமாகத் தீர்ப்பதில் இப்பிரச்னையை மனிதாபிமானத்துடன் அணுகுவதற்கு இவ்வித மகாநாடே சிறந்த வழி. இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் மொழிப் பிரச்னையை சமரசமாகத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் கடைசியாக அக்கறை எடுத்துள்ளது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இப்பிரச்னை குறித்து தமிழ்பிரதிநிதிகளின் கருத்தை அறிந்து அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்த்துவைக்க முன்வந்தது பாராட்டக்கூடியதொரு செயலாகும். விரைவில் கூட்டவிருக்கும் வட்டமேசை மகாநாடு, நாட்டில் ஐக்கியத்தையும் நல்லெண்ணத்தையும் உருவாக்க வழி வகுக்குமென நான் நம்புகின்றேன்" என்றும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.



மந்திரிசபையின் வட்டமேசைமகாநாடு குறித்து தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அபிப்பிராயம் தெரிவிக்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் மொழிப் பிரச்னை தமிழர்களுக்கு நீதி வழங்கும் வகையில் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டுமென்றும் இதில் இனிமேல் சிறிதளவும் தாமதம் கூடாதென்றும் கூறினர். "மொழிப்பிரச்னையால் இலங்கையில் இருபெரும்சமூகத்தினர் ஒற்றுமையாக வாழ முடியாதிருக்கிறது. தேசிய நலனை உத்தேசித்து மொழிப்பிரச்னை விரைவில் தீர்க்கப்படல் வேண்டும். இந்த வகையில் மந்திரிசபை மொழிப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க வட்டமேசை மகாநாடொன்றைக் கூட்டுவதென்ற யோசனை மிகவும் வரவேற்கத்தக்கது. வட்டமேசை மகாநாடு விரைவில் கூட்டப்பட்டு இதற்கு தீர்வு காணப்படவேண்டும்" என்றும் திரு. செல்வநாயகம் தெரிவித்தார்.

## கொழும்பில் நடைபெறுது?

### மண்டலசார்பற்ற மகாநாடு

கொழும்பு, வியாழன்

மண்டல சார்பற்ற நாடுகளின் உத்தேச தூதர்கள் மகாநாடு முன்னர் திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெற மாட்டாதென்றும் இம்மகாநாடு நுவரேலியாவில் நடைபெறலாமென்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சு இது சம்பந்தமான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது. மகாநாட்டை கொழும்பில் நடத்த போதிய இடவசதி இல்லாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## தேசிய சுவீப்

கொழும்பு, வியாழன்

இன்று மாலை ஐந்து மணிக்கு இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் முதலாவது சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெற்ற அதிர்ஷ்ட டிக்கட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:

முதற் பரிசு
16 J 0034 — ரூ. 65,000

இரண்டாம் பரிசு
01 N 0034 — ரூ. 25,000

மூன்றாவது பரிசு
04 R 0889 — ரூ. 10,000

இதுதவிர 100 டிக்கட்டுகளுக் தலா ரூ. 305 வழங்கப்பட்டுள்ளன. எல்லா பரிசுகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

## ரஷ்யாவில் பௌத்தம்

கொழும்பு, வியாழன்

இங்கு வந்துள்ள ரஷ்ய நல்லெண்ண விஞ்ஞானிகள் குழு தங்கள நாட்டில்பௌத்த சமயம் விரைவாக பரவிவருவதாக தெரிவித்தனர்.

## செல்வி சுனித்ரா ஒக்ஸ்பேர்ட் செல்லார்

கொழும்பு, வியாழன்

பத்திரிகைகளில் வெளியான செய்திகளின் பிரகாரம், பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் புதல்வி சுனித்ரா ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்குச் செல்ல மாட்டார் என்று கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கை பல்கலைக்கழக வெளி மாணவர் சங்க தூது கோஷ்டியொன்று இது பற்றிக் கேட்ட போதே மந்திரி மேற்கண்டவாறு கூறினர். இப்படியான பத்திரிகை செய்திகளை நம்பவேண்டாம் என்றும் மந்திரி கூறினர்.

## பிரசவதாய்மார் இறப்புவிகிதம் குறைவு

கொழும்பு, வியாழன்

தென்கிழக்காசியாவிலுள்ள நாடுகளில் இலங்கையில மட்டுமே பிரசவத் தாய்மார் குறைவாக இறக்கின்றனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

### மனவாக்கு

நாம் கடவுளுக்கு ஆட்பட்டு கீழ்ப்படிந்து நடக்கத் துணிந்து விட்டால், அவர் தன் அளவு கடந்த சக்தியால், வெகு தூரத்திலுள்ள நட்சத்திரத்தையும், மணலையும் கூட நமக்கு உதவப்பணிப்பார்.
—ஆஸவால்ட் சேம்பர்ஸ்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tam Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி 9 ம் உ. (21-2-64)


## இந்தியா-சீன எல்லைத்தகராறு

பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின்னும், சீனப்பிரதமர் சூ-என்-லாயும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இந்திய-சீன எல்லைத் தகராறைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்திய சீன எல்லையிலே நெருக்கடி நிலைமை தணிந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாயும், கொழும்பு மகாநாட்டு யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பிரச்சனையில் இறுதித் தீர்வுக்கு வழி பிறக்குமென்று இருவரும் நம்பிக்கை தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது. இதன் விபரம் தெரியவில்லை என்றாலும் இந்திய அரசாங்க வட்டாரங்களும் இதை வரவேற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு மகாநாட்டில் பர்மியத் தலைவர் நீவின்னும் கலந்து கொண்டார். அவர் இந்தியாவுக்கும் சீனத்துக்கும் பொது நண்பர். அவர் சில நாட்களுக்கு முன் அவசரமாக புதுடில்லிக்கு விஜயம் செய்து பிரதமர் நேருவை, இருமுறை கண்டு பேசினார். நேருஜியின் உடல் நலத்தைப்பற்றி விசாரிக்கவே அவர் வந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் சீனப் பிரதமரின் பர்மிய விஜயத்துக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்பாக அவர் புதுடில்லிக்கு அவசரமாக வந்ததால், இந்திய-சீன எல்லைத் தகராறைத் தீர்க்க அவர் இச் சந்தர்ப்பத்தை மேலும் பயன்படுத்த ஆவல் கொண்டிருப்பாரென்று கருதுவது தவறாகாது. சீன விஷயமாக ஏற்பட்ட பெரிய ஏமாற்றமே நேருவின் உடல்நிலையைப் பாதித்திருக்க வேண்டும். இவ்விஷயத்தில் ஒரு நல்ல சமரசம்செய்து வைக்க முடியுமாயின், அதுவே நேருஜிக்கு புதிய பலமும் உற்சாகமுமளிப்பதுடன், பர்மாவுக்கும் அது நன்மையாகுமென்று தலைவர் நீவின் கருதக் காரணமுண்டு.

எப்படியும் கொழும்பு மகாநாடு கூறிய யோசனைகளை இந்தியா அப்படியே ஒப்புக் கொண்டது. ஆனால் பீகிங், அதன் கொள்கையை ஒப்புக் கொண்டபோதிலும், சில ஆட்சேபனைகளைக் கிளப்பியது. கொழும்பு மகாநாட்டு யோசனையின் அடிப்படையில் ஒரு சமரசம் ஏற்படுத்திக் கொள்ள சீனம் தயாராக இருப்பதாக மேற்குறித்த அறிக்கை மூலம் தெரிவதால், இந்த எல்லைத் தகராறு சுமுகமாகத் தீருவதற்கான புதிய நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

பர்மாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்று விட்டு, சீனப் பிரதமர் சூ-என்-லாய், அடுத்த வாரம் இலங்கைக்கு வருகின்றார். அவர் பல ஆபிரிக்கா, ஆசிய நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு முக்கிய நோக்கம் இருக்கத்தான் வேண்டும். இதுவரை ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவும் அடிமைப்பட்டிருந்ததால், அம்மக்களுடன் சீனம் உறவு கொள்ள முடியவில்லை. அவர்கள் சுதந்திரம் பெற்றுவிட்டதால், அவர்களுடன் நட்புறவு கொண்டு அவர்களது நல்லெண்ணத்தைப்பெற சீனம் இப்போது முற்பட்டிருப்பது இயற்கை. தமது இந்த முக்கிய சுற்றுப் பிரயாணத்தில், சீனப்பிரதமர் சூ, பொதுவாக ஆசிய ஆபிரிக்க மக்களின் மனதையும் அவர்களுக்கு இந்தியாவின்பால் உள்ள அபிமானத்தையும் தெரிந்து கொண்டிருக்கலாம். மகாத்மா காந்தியின் தலைமையில் போராடி, பெரும் தியாகம் செய்து ஏகாதிபத்திய பிடியிலிருந்து இந்தியா விடுதலை அடைந்ததன் பயனாகவே, தாங்களும் சுதந்திரம் பெற முடிந்ததென்பதை நன்றியுள்ள அம்மக்களில் பலரும் உணர்ந்துள்ளதையும் சீனப் பிரதமர் சூ, இதற்கிடை அறிந்திருக்கலாம்.

அதனால் கொழும்பு மகாநாட்டிலே ஆசிய-ஆபிரிக்க மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து கூறியுள்ள சமரச யோசனையை இந்தியா ஏற்றுக் கொண்டும், தாங்கள் இன்னும் ஏற்காமல் இருப்பதின் பெருந் தவறை உணர்ந்து, அதைத் திருத்திக் கொள்ள சீனம் இப்போது ஆவல் கொண்டிருப்பின் அதில் வியப்பில்லை. இந்நிலையில் அடுத்த வாரம் அவர் இலங்கைக்கும் வருகிறார். இச் சந்தர்ப்பத்தை இலங்கையும் பயன்படுத்தி கொழும்பு யோசனைகளை சீனம் உடன் ஏற்கு மாறு செய்ய அதிக வாய்ப்புண்டு.

## மன்னார் பட்டின சனசமூகநிலையம்

எருக்கலம்பிட்டி, வியா.

மன்னார் பட்டின சனசமூக நிலையத்தை மன்னார் எம். பி. திரு. வி. அ. அழகக்கோன் திறந்துவைத்துப் பேசுகையில்பின் வருமாறு குறிப்பிட்டார்.

வாலிபர்களின் வையில் பிற்கால வாழ்வு தங்கியிருக்கின்றது. அறிவாளிகளாக விளங்க வேண்டுமாயிருந்தால் இந்நிலையத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அறிவைப் பெருக்குவதோடு மாலை நேரங்களில் உடலுக்கு வலிமையையும் மூளைக்கு சாந்தியையும் கொடுக்கும் விளையாட்டுகளில் ஈடுபடவேண்டும்.

மன்னார் பட்டினசபைத் தலைவர் ஜனாப் ரகீம் பேசுகையில் மன்னார் முற்றவெளி மைதானத்தை சிறந்த விளையாட்டு அரங்காக மாற்ற தன்னால் இயன்ற சகல உதவிகளையும் நல்க தயாராக இருப்பதாக வாக்குறுதியளித்தார்.

பின்வரும் உத்தியோகத்தர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

காப்பாளர்கள்: வி. அ. அழகக்கோன் —எம். பி., அ. ரகீம் நகரசபை தலைவர், பங்கிராசா பொன்னையா, ஏ. அலக்சாண்டர். தலைவர்: சபா மாசிலாமணி, உபதலைவர்: ரவீந்திரன். செயலாளர்: ஆர் விஜயரத்தினம், உதவி செயலாளர்: அந்தோனிதாஸ், தனாதிகாரி: ஜெகநாதன்.

# மன்னாரில் முந்திரிச் செய்கை
## முடிக்குரிய காணிகள் வழங்கப்படும்

கொழும்பு, வியாழன்

சுமார் 25,000 ஏக்கர் முடிக்குரிய காணிகள் முந்திரிபருப்பு செய்கைக்காக தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும், தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது. முந்திரிப் பருப்புச்செய்கைக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் காணி அமைச்சர் இவ்வித முடிவுக்கு வந்துள்ளார்.

முதன்முதலாக மன்னார் மாவட்டத்தில் முந்திரிபருப்பு செய்கையை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதற்கான விபரங்கள் நாளை வெளியாகும் வர்த்தமானியில் தெரிவிக்கப்படும்.

நில பரிசோதனையின்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள மறுச்சிக்கட்டி என்னுமிடத்துக்கும் சிலாவத்தை என்னும் இடத்துக்குமிடையில் மோதரகம் ஆற்றின் பக்கத்தில் உள்ள பிரதேசம் முந்திரிப்பருப்பு பயிரிடுவதற்கு உகந்த இடம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் உள்ள மண்வளம் முந்திரிகை செய்கைக்கு தக்க இடம் எனவும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். உரிய முறையில் பயிரிட்டால் நல்ல பயன் அடையலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# புதிய தொழிற் சங்க சம்மேளன விசேஷ மாநாடு

கொழும்பு, வியாழன்

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்திலுள்ள சண்முகநாதனின் எதிர்ப்புக் கோஷ்டியினர், திரு. எம். ஜி. மெண்டிஸ் திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் தலைமையில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொழிற் சங்கசம்மேளனத்தின் விசேஷ மகாநாட்டை அடுத்த மாதம் 6-ம், 7-ம் தேதிகளில், கொழும்பு நகர மண்டபத்தில் கூடவிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக திரு. பீட்டர் கெனமன், விசேஷ மகாநாட்டின் முக்கிய நோக்கம், ஐக்கிய இடதுசாரி முன்னணியைச்சேர்ந்த தொழிலாளர்களை ஒன்று சேர்ப்பதென்றும், அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடாத்தப்படவிருக்கும் இயக்கத்திற்கு ஆதரவு பெறவென்றும் கூறினார்.

இவ்விசேஷ மகா நாடு, ஹைட் பார்க்கிலிருந்து ஆரம்பமாகும் மாபெரும் ஊர்வலத்தை தொடர்ந்து நடைபெறும். சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி திரு. மெண்டிஸினால் வெளியிடப்படவிருக்கும் அறிக்கையைப் பற்றி கடந்த வாரம் கூடிய இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் செயல்கமிட்டி ஆராய்ந்தது.

ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள தொழிற்சங்க தலைவர்களும், இம் மகாநாட்டில் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

# ஜெர்மன் பொருளாதார உதவி இலங்கைக்கு நிறுத்தப்படும்?
## கிழக்கு ஜெர்மன்

பொன், பெப். 29

கொழும்பில் கிழக்கு ஜெர்மன் தூதராலயம் ஒன்று நிறுவப்படுமானால் இலங்கைக்கு மேலும் பொருளாதார உதவி அளிப்பது சாத்தியமாய் இருக்காது என மேற்கு ஜெர்மன் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

எதிர்காலத்தில் புதிய உதவி அளிப்பதை நிறுத்துவதும், ஏற்கனவே உத்தரவாதமளிக்கப்பட்ட உதவியைத் தாமதிப்பதுமே புதிய நடவடிக்கையின் எதிரொலியாக இருக்கும் என வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

“இலங்கைக்கு நாங்கள் குறிப்பிடத்தக்க அளவு உதவியளிக்கிறோம்” என்றும் அவர் கூறினார்.

இலங்கையும் கிழக்கு ஜெர்மனியும் கொழும்பில் ஒரு கான்ஸ்லேட் காரியாலயத்தை ஸ்தாபிக்கவேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்தலையும், ஜெர்மன் பிரச்னை கம்யூனிஸ்ட் யோசனைப்படி தீர்க்கப்படவேண்டும் என ஸ்ரீமதி சிறிமாவோ முன்பு ஒரு முறை அறிக்கை விட்டதையும் அரசாங்க அறிக்கையொன்று சுட்டிக்காட்டியது.

“இவ்வித உறவை கிழக்கு ஜெர்மனியுடன் வைத்துக் கொள்வது ஜெர்மன் மக்களின் நலன்களைப் பாதிக்கும் என அடிக்கடி மேற்கு ஜெர்மன் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

இலங்கையின் இவ்வித நடவடிக்கை இலங்கை—ஜெர்மன் உறவின் சகல அம்சத்தையும் பாதிக்கும். எனவே இலங்கைக்கு இருசாராரும் விரும்பியபடி பொருளாதார உதவியைத் தொடர்ந்தளிப்பது சாத்தியமில்லாமலிருக்கும். ஜெர்மன் சமஷ்டி அரசாங்கம் இது பற்றி வருந்துவதுடன், இதற்கான பொறுப்பு தம்மைச் சார்ந்ததல்லவென்றும் தெரிவித்துக்கொள்கிறது” என்றும் மேற்கு ஜெர்மன் அறிவிப்புக் கூறுகிறது.

இலங்கைக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே ராஜதந்திர உறவை முறித்துக்கொள்ளும் யோசனை தற்போது கிடையாது என மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

இலங்கைக்கு மேற்கு ஜெர்மனி தொடர்ந்தும் அபிவிருத்தி உதவி அளிக்க முடியாது என ‘டைவெல்ட்’ என்ற ஜெர்மன் சுயேச்சைப் பத்திரிகை கூறியது.

## பதவி மாற்றம்

கொழும்பு, வியாழன்

திறைசேரியின் உதவிக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. கு. பாலசிங்கம் இன்று சுகாதார வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகப் பதவி ஏற்றுள்ளார். சுகாதார வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக கடமையாற்றிய திரு. வி. எல். வீரசிங்கா தபால் மராமத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக பதவியேற்றார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

டிராது. இனியாவது காங்கிரஸ் இதில் கவனம் செலுத்துமா?

* * *

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த,
உன்மத்தன் உரம் நெரித்தன்றருள் செய்தான் உறை கோயில்,
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க,
விண் மொய்த்த பொழில் வரிவண்டிசை முரலும் வெண்காடே.

— திருஞானசம்பந்தர்

## ஐயாறன் எழுதுவது

வண்ணார்பண்ணையிலே நடைபெற்றுவரும் நாவலர் பாடசாலையை அகற்ற சிலர் முயற்சி செய்வதாகக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

புகழ்பெற்ற இப்புனித பாடசாலையைப் புதுப்பித்துக்கட்ட தீவிர முயற்சிகள் நடக்கையில் இதை இங்கிருந்து அகற்றுவானேன்? இப்பாடசாலை ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் புகழ்பெற்றது. “நாவலர் பெருமான் அல்லது ஐந்தாங்குரவர்” என்ற நூல் எழுதிய மகரிஷி சுத்தானந்தபாரதியார், ஈழம் வந்திருந்தபோது, இப் பாடசாலையைப் பார்க்க நேரில் ஆவலுடன் சென்று, அங்கு மேடையிலுள்ள நாவலர்பெருமானுக்குப் பக்தியுடன் அஞ்சலி செலுத்தினாராம்.

ஈழத்தின் சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய இப்பாடசாலையில் சென்ற பல வருடங்களிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் கல்வி பயின்று வந்துள்ளனர். இப்பள்ளியை அகற்றுவது நாவலர் பெருமானை அவமதிப்பதாகுமென்றும் இந்தப் பாடசாலையை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் பல அன்பர்கள் வந்து உணர்ச்சியுடன் தெரிவித்தனர்.

* * *

யாழ்ப்பாணத்திலே வி. டபிள்யு. ஈ. கடை முன்பாக கியூ வரிசையில் மக்கள் மணிக்கணக்காகக் கால்கடுக்க நிற்கின்றார்கள். அங்கு ஏதோ துணி விற்பனைக்கு வந்துள்ளதாம். அதைக்காசு கொடுத்து வாங்கத்தான் இவ்வளவு கூட்டமும். வஸ்திரதானம் நடைபெறவில்லை!

பலநூறு கடைகள் செய்து வந்த ஒரு சேவையை ஒரே ஒருகடை மட்டும் செய்ய வேண்டுமென்றால் எப்படி இருக்கும்! உணவில்லாமல் பலநாள் இருந்தாலும் இருக்கலாம். மானம் மூடத் துணியில்லாமல் அரைக்கணமும் எப்படி இருப்பது!

துணி கிடைக்காமல் பலர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றார்கள். இதற்கெல்லாம் எப்போது விமோசனமோ!

* * *

நமக்கு வேண்டிய துணிகளை வாங்க பல நாடுகளுக்கும் சிலர் காவடி தூக்கிச் செல்லுகின்றார்கள். இந்தியாவிலும் சென்று ‘ஆர்டர்’ கொடுத்தார்களாம். ஆனால் தமிழர்களுக்கு வேண்டிய வேட்டிகளுக்கு ‘ஆர்டர்’ கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. வேட்டிப் பஞ்சத்தால் ஏற்கெனவே தமிழரில் பலர் ‘சாரம்’ கட்ட வேண்டியுள்ளது. இனி இதுவும் கிடைக்குமோ என்ற கவலை பலருக்கும்.

* * *

மலைநாட்டிலுள்ள 9 லட்சம் தமிழருக்கும் எவ்வித துணியும் கிடைக்க முடியாத ஆபத்து ஏற்பட்டுள்ளதாம். அரிசிக்கூப்பன்மீது துணிப்பங்கீடு அமுலுக்கு வந்ததும், தோட்டப் பகுதியிலுள்ளவர்களுக்கு துணியே கிடைக்க முடியாது போகுமென்றும் அவர்களுக்கு அரிசிக் கூப்பன் புத்தகம் கிடையாதென்றும் ஆகவே தோட்டதுரை அல்லது சங்கக்கடைகள்மூலம் அரிசியைப்போல் துணியும் விற்க ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் உணவுமந்திரிக்கு தொண்டமான் கடிதம் எழுதி இருக்கிறாராம்.

பாவம் இந்தக் குளிரிலே அங்குள்ள மக்கள் எவ்வளவு தவிக்கிறார்களோ!

அங்குள்ள காங்கிரஸ் ஆக்க முறையில் காந்தி அடிகளின் உபதேசப்படி பின்பற்றி கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தால் இந்த அவலநிலை ஏற்பட்

(4-ம் கலம் பார்க்க)

# கெபோனில் புரட்சி நசுக்கப்பட்டது

## ஜனாதிபதி எம்பா மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்

### பிரெஞ்சு துருப்புக்கள் நடவடிக்கை

லிப்ரிவில்லி, பெப். 20

மேற்கு ஆபிரிக்காவிலுள்ள கெபோனில் ஏற்பட்ட புரட்சி நசுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி எம்பாவின் ஆட்சி அங்கு மீண்டும் நிலைநாட்டப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. புரட்சித் துருப்புக்கள் சரணாகதியடைந்தன.

விமானமூலம்நேற்றுஅனுப்பப்பட்ட பிரெஞ்சுத் துருப்புக்கள் நிலைமையை இப்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாயும், தலைநகரும் இதர முக்கிய இடங்களும் அவர்களது கட்டுப்பாட்டில் இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

பிரெஞ்சுத் துருப்புக்கள் கெபோனில் இறங்கியவுடன் புரட்சிப்படைகளுக்கும் அவர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதென்றும் சேதவிபரம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

பிரெஞ்சு நடவடிக்கைபற்றி பாரிசில் திருப்தி தெரிவிக்கப்பட்டது. கெபோனின் சட்டபூர்வமான அரசாங்கம் உதவி கோரியதின் பேரில் பிரெஞ்சுத் துருப்புக்கள் உதவிக்கு அனுப்பப்பட்டதென்றும் 1961-ம் ஆண்டு உடன்பாட்டின்படி அந்த நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் வெளிநாட்டுத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கும் பிரான்சுக்குப் பொறுப்புண்டு என்றும் அறிவிக்கப்பட்டது.

மலேஷியா

## "யுத்தமே பரிகாரம்"

கோலாலம்பூர், பெப். 20

மலேஷியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கிடையே அடுத்தவாரம் பாங்காக்கில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

போர்ணியோவில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் இன்னும் இருப்பது குறித்து கோலாலம்பூர் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

மலேஷியா, மகாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால், யுத்தமே அதற்குப் பரிகாரமாயிருக்கும் என இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

## மாஜி எம். எல். ஏ.க்கு சிறையும், அபராதமும்

### கன்னக்களவு வழக்கில் தீர்ப்பு

ஷோலாப்பூர், பெப். 20

ஒரு உதவி பொலிஸ் சுப்ரின்டனுக்கும், 2 சப் இன்ஸ்பெக்டர்களுக்கும், ஒரு சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர், மகாராஷ்டிர அசெம்பிளியின் ஒரு மாஜி அங்கத்தவர் ஆகியோருக்கு ஷோலாப்பூர் செஷன்ஸ் நீதிபதி பல்வேறு காலங்களுக்குச் சிறைத்தண்டனை விதித்தார். எதிரிகளுக்கு அபராதங்களும் விதிக்கப்பட்டது.

ஒருதிருட்டு வழக்கொன்றில் தீர்ப்புக் கூறுகையிலேயே நீதிபதி இந்த கட்டளைகளை வழங்கினர்.

மோடானியம் என்ற இடத்தைச்சேர்ந்த காந்திலால்ஷா என்பவர் வீட்டில் 1961 டிசம்பர் 7 ம் திகதி கன்னம்வைத்து ருபா 2 லட்சம் பெறுமான நகைகளும் ரொக்கமும் திருட்டுப் போயின.

இத்திருட்டைப்பற்றி புலன் விசாரணை நடத்தும்பொறுப்பு உதவி பொலிஸ் சுப்ரீண்டனிடம் ஒப்படைக்கப்பட்டது. புலன்விசாரணையில் மிகவும் தாமதம் ஏற்படுவதாக காந்திலால் புகார் செய்தார். பிறகு புலன்விசாரணை பூனா உதவி பொலிஸ் சுப்ரின்டனிடம் ஒப்படைக்கப்பட்டது.

உதவிப் பொலிஸ் சுப்ரின்டன் சங்கர் தோராட் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும், மாஜி எம். எல். ஏ. பாபுரால் பட்டீலும் சதியாலோசனை நடத்தி திருட்டுப் போன சொத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதாக நீதிபதி தனது தீர்ப்பில்குறிப்பிட்டார். உதவி பொலிஸ் சுப்ரின்டன் தோராட்டிற்கும் மாஜி. எம். எல். ஏ. பாபுரால் பட்டீலுக்கும் நீதிபதி தலா 3 வருடக் கடுங்காவல் தண்டனையும், ருபா 2000 அபராதமும் விதித்தார்.

## சீனு-பாகிஸ்தான் நாடுகளுடன் கொண்டுள்ள தகராறு

### நீண்டகாலம் விட்டுவைக்கக் கூடாது என்கிறர் சாஸ்திரி

புதுடில்லி, பெப். 20

சீனவுடனும் பாகிஸ்தானுடனும் உள்ள தகராறு நீண்டகாலம் தீர்க்கப்படாமல் விட்டுவைக்கக்கூடாது என இலாகா இல்லாத மந்திரி திரு. லால்பகதூர்சாஸ்திரி இந்திய பார்லிமெண்டில் கூறினர்.

"சீனவுடனன தகராறு கொழும்பு யோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் கௌரவமாகத் தீர்க்கப்படவேண்டுமென்றும் அவர் கூறினர்.

பர்மாவில் வெளியிடப்பட்ட சூ-என்-லாய், நீவின் கூட்டறிக்கையின் வாசகம் இன்னும் புதுடில்லிக்குக் கிடைக்கவில்லை என்றும் கொழும்பு யோசனைப்படி இருநாடுகளுக்குமிடையேயான எல்லைப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்ட".

இதற்கிடையில் சீனப்பிரதமர் சூ-என்-லாய் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருப்பது குறித்து அமெரிக்கா அதிருப்தி தெரிவித்திருக்கிறதென்று வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ கராச்சி நிருபர்களிடம் கூறினர்.

## லெபனனில் தேர்தல்

பேருட், பெப். 20

லெபனன் பிரதம மந்திரி தமது ராஜினமாவை நேற்றுச் சமர்ப்பித்தார். புதிய மந்திரிசபை நிறுவப்படும்வரை பதவியிலிருக்கும்படி ஜனதிபதி அவரைக் கேட்டுக்கொண்டார். ஏப்ரல் மாதம் புதிய தேர்தல் நடைபெறுமென ஜனதிபதி பின்பு அறிவித்தார்.

## கிரீஸ் மந்திரிசபை

ஏதென்ஸ், பெப். 20

திரு. பயண்ட்ரோ தலைமையிலான புதிய கிரீஸ் மந்திரிசபை, நேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டது.

## கிரிக்கெட்

கான்பூர், பெப். 20

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்ற 5 வது கிரிக்கெட்டெஸ்ட்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 266 ரன்கள் எடுத்து. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடியது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 559 ரன்கள் எடுத்தது.

## சைப்ரஸுக்கு மேலும் பிரிட்டிஷ் துருப்புக்கள் அனுப்பப்பட்டன

நியுயோர்க், பெப். 20

சைப்ரஸ் பிரச்னை பற்றி நேற்று பாதுகாப்புச் சபை கூடியபோது, அந்த நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு ரஷ்யப் பிரதிநிதி கேட்டுக்கொண்டார்.

சைப்ரஸின் அழைப்பின் பேரிலேயே பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு சென்றனவென்று பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. பெட்ரிக் டீன் தெரிவித்தார்.

சைப்ரஸில் வகுப்பு சௌஜன்யத்தை நிலைநாட்டுவதின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது மிகவும் அவசரமென அமெரிக்கப் பிரதிநிதி கூறினர்.

இதற்கிடையில் மேலும் 1,500 பிரிட்டிஷ் துருபபுகள் சைப்ரஸுக்கு அனுப்பப்பட்டன. ஏற்கனவே அங்கு 5,000 பிரிட்டிஷ் வீரர்கள் இருக்கிறர்கள்.

### மாலுமிகளை மீட்க முயற்சி

நியுயோர்க், பெப். 20

"அம்பேசடர்" என்ற 7,308 டன் பிரிட்டிஷ் கப்பல் மூழ்கியதால், கடலில் தவிக்கும் 35 பிரிட்டிஷ் மாலுமிகளைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. வேகமான காற்றும், கடல் 35 அடி உயரம் கொந்தளித்துக்கொண்டிருப்பதாலும் தேடுதல் முயற்சி இன்னும பூர்த்தியடையவில்லை.

சென்னை, பெப். 20

தமிழ்நாட்டில் நடைபெற்ற முனிசிப்பல் தேர்தல்களில் காங்கிரஸ் பெரும்பான்மை நகரசபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. இதுவரை நடைபெற்ற 64 முனிசிப்பல் தேர்தல்களில் காங்கிரஸ் 34 சபைகளைக் கைப்பற்றியது.

## "எல்லைப் பைசலுக்கு குருஷ்சேவ் யோசனை பொருந்தும்"

### ஸ்ரீமதி மேனன் பேச்சு

புதுடில்லி, பெப். 20

எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள பலாத்காரம் உபயோகிக்கக் கூடாது என்ற சோவியத் பிரதமர் குருஷ்சேவின் யோசனை இந்தியா-சீன எல்லைத்தகராறுக்கும் பொருந்தும் என வெளிவிவகாரதுணை மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் கூறினர்.

"சீன ஏற்கனவே இந்தியப் பகுதியை சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டு, இந்தியா அதை மீட்க வேண்டிய நிலையில் இருக்கையில் குருஷ்சேவின் யோசனை எப்படிப் பொருந்தும்? இழந்த பகுதிகளை மீட்க பலாத்காரத்தை உபயோகிக்க மாட்டோம் என இந்தியா ஒப்புக் கொண்டிருக்கிறதா" என திரு வாஜ்பேயி கேட்டார்.

"இந்தியா எவ்வகையிலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. குருஷ்சேவ் பிரேரணையை பொதுவாக நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறேம். எதிர்காலத்தில் எல்லா நாடுகளுக்கும் இடையே இவ்வாறு ஒரு ஒப்பந்தம் ஏற்படும் என இந்தியா நம்புகிறது" என்றும் ஸ்ரீமதி மேனன் கூறினர்.

## ஷில்லாங்

புதுடில்லி, பெப். 20

ஷில்லாங்கில் பிரதான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆனல் பொலிசாருக்கும், சில நபர்களுக்குமிடையே கைகலப்புகள் போன்ற சிறிய சம்பவங்கள் ஏற்பட்டன. துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டன.

## ஸ்ரீ கிருபானந்தவாரியாருக்கு ஜீயர் சுவாமிகள் பாராட்டு

### மகாபாரத பூர்த்தி விழாவில் பொற்பதக்கம் வழங்கப்பட்டது

சென்னை, பெப். 20

ஸ்ரீ கிருபானந்தவாரியாருக்கு 'ஷட்பாடானந்த' என்ற பட்டத்தை ஸ்ரீ அகோபிலம்ஜீயர் சூட்டினர் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ திருக்கள்ளம் நரசிம்மராகவச்சாரியார் பொற்பதக்கத்தை ஸ்ரீ வாரியாரிடம் அளித்தார்.

மயிலை மகாமண்டபத்தில் ஸ்ரீ கிருபானந்தவாரியார் நடத்திவந்த மகாபாரதப் பூர்த்தி விழாவில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். விழாவுக்குத் தலைமைவகித்த ஸ்ரீ வெங்கட்ராமன் சமூகத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக, ஸ்ரீ வாரியார் செய்துவரும் சேவையைப் பெரிதும் பாராட்டினர். ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தானம், திருப்பாவை-திருவெம்பாவை பிரசங்கக் கமிட்டி ஆகியன பாராட்டுதல்கள் தெரிவித்தன.

ஸ்ரீ கண்ணதாசன் தனது பாராட்டுதலைத் தெரிவித்ததுடன், சூலையில் ஸ்ரீ கந்தசாமி கோயில் திருக்குளத்தின் திருப்பணிக்காக ரூ. 5000 நன்கொடையும் அளித்தார். திருக்குளத் திருப்பணியை ஸ்ரீ வாரியார் மேற்கொண்டிருக்கிறர். மகாபாரத பிரசங்கக் கமிட்டியின் சார்பாக, ஸ்ரீ எஸ். ஜீ இரத்தினம் ஐயர் ரூ. 20,000 ரொக்கத்துக்கான செக் ஒன்றை ஸ்ரீ வாரியாரிடம் அளித்தார்.

## 2 மனிதருடன் வான்வெளிக் கப்பல்

வாஷிங்டன், பெப். 20

வானவெளியில் 100 மைலுக்கும் 185 மைலுக்குமிடையே பூமியை மும்முறை வலம்வரும் இருமனிதர்களைக் கொண்ட வானவெளிக் கப்பல் இவ்வாண்டுக் கடைசியில் அனுப்பப்படும் என அறிவிக்கபபடுகிறது. இதற்காக தெரிவுசெய்யப்பட்ட 29 பேரில் பாதிப்பேர் பொதுப்பயிற்சியைமுடித்துக் கொண்டார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சாக்கோ ராஜினமா

திருவனந்தபுரம், பெப். 20

கேரள மந்திரிசபையிலிருந்து தாம் ராஜினமாச் செய்ய காங்கிரஸ் அக்ராசனர் திரு. சாமராஜ் அனுமதியளித்திருப்பதாக உள்நாட்டு மந்திரி சாக்கோ கூறினர். இன்று தமது ராஜினமாவைச் சமர்ப்பிக்கப் போவதாய்அவர் கூறினர்.

## விமானம் இன்னும் காணவில்லை

புதுடில்லி, பெப். 20

காணமற்போன இந்திய விமானப்படை விமானம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டது.

## சுவஸ்திகா பயமுறுத்தல்

பிரேங்க்பர்ட், பெப். 20

இங்கு நடைபெறும் ஆஷ்விச் வழக்குவிசாரணையில் பங்கு பற்றும் வாதிதரப்பு வழக்கறிஞர்களும் சாட்சிகளும் கொல்லப்படுவார்கள் என 'சுவஸ்திகா' சின்னத்துடன் கையெழுத்திட்ட ஒரு பயமுறுத்தல் கடிதம் கிடைத்திருக்கிறது.

இங்குள்ள யூதர் சமூகத்தவருக்கு இக்கடிதம் கிடைத்திருக்கிறது. "எங்களுக்குச் சமாதானம் வேண்டும். இதற்கு முயற்சி செய்யாவிட்டால் ஜெர்மன் மக்கள் மேலும் பொறுமையுடன் இருக்கமாட்டார்கள். நாங்கள் யுத்தப் பிரகடனம் செய்வோம். இது குறிப்பாக வழக்கில் குற்றஞ்சாட்டுபவர்களின் உயிருக்கு உலை வைக்கும்" என இக்கடிதம் கூறுகிறது.

## சைப்ரஸ் சமாதானப் படையில் இந்தியா

வாஷிங்டன், பெப். 20

சைப்ரஸில் அமைதியைப் பாதுகாக்க நடுநிலைமை நாடுகள், காமன்வெல்த் நாடுகளின படைகள் அமைக்கப்படவேண்டுமென்ற யுதாண்டின் யோசனை பற்றி அமெரிக்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடாக இருப்பதால் அது பங்குபற்றுவதை சைப்ரஸ் கிரேக்கர்கள் எதிர்க்கக்கூடுமென்றும், பாகிஸ்தான் துருக்கிக்கு ஆதரவுகாட்டியுள்ளதென்றும்கூறப்பட்டது. ஆனல் இந்தியாவின் நிலைமை வேறு என்றும் கூறப்பட்டது.

# கோரிக்கைகளை நிறைவேற்ற பணமில்லை

## தூதுகோஷ்டியினருக்கு பிரதமர் கைவிரிப்பு

கொழும்பு, வியா.

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர்சங்கம் அண்மையில் பிரதமரைப் பேட்டிகண்டது. பேட்டிகண்டாலும் எவ்வித முடிவும் ஏற்படவில்லை என்றும் முக்கிய கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றும் தபால் தந்தி ஊழியர்சங்க காரியதரிசி தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் பதவிவகித்த ஆறுக்கும் குறையாத நிதிமந்திரிகளையும், தபால் மந்திரிகளையும் தாம் பேட்டிகண்டதாகவும் ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லையென்றும் மேலும் சங்கக் காரியதரிசி தெரிவித்தார். இவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் எவ்வித பயனுமளிக்காமையினாலேயே இப்பொழுது பிரதம மந்திரியைக் கண்டதாகவும் ஆனால் அதுவும் திருப்தியளிக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார். தாங்கள் தெரிவித்த கோரிக்கைகளில் 4 கோரிக்கைகளுக்கே பிரதமரும் அவரது கோஷ்டியினரும் சம்மதம் தெரிவித்ததாகவும் தாங்கள் கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற நிதிபோதாக் குறையாக இருப்பதாக பிரதமர் தெரிவித்ததாகவும் காரியதரிசி குறிப்பிட்டார். பிரதமர் நிதியில்லை என்று தெரிவித்ததும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகத் தாம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இப்பேச்சுவார்த்தை சம்பந்தமாக அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் பேச்சுவார்த்தையின் போது நிதிமந்திரி, தபால் மந்திரி ஆகியோர் பிரசன்னமாயிருந்ததாகவும், தபால் கந்தோர்களுக்கு கட்டடம் அமைத்தல், ஊழியர் பற்றாக்குறை பற்றிப் பேசப்பட்டதாகவும் நாலு கோரிக்கைகளுக்கு இணக்கம் கண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

## தற்கொலை

ஊர்காவற்றுறை, வியா.

நாரந்தனை வடக்கு வாசியான கார்த்திகேசுவின் மனைவி பொன்னம்மா (வயது 53) நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

பிரஸ்தாபப்பெண் நச்சுத்திராவகம் அருந்தியதை அறிந்த சுற்றத்தவர்கள் அவரை உடனே ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். மோட்டார்வாகனம் எதுவும் கிடைக்காமையால், மாட்டு வண்டியில் கொண்டு போனசில நிமிஷங்களின்பின் ஆஸ்பத்திரியில் இவர் காலமானார். ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. மா. முருகேசு விசாரணை நடத்தினார். விசாரணையின் பின் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## கிரிமிநாசினி தெளித்தவர் மரணம்

கரவெட்டி, வியாழன்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த குட்டியர் சின்னையா (25 வயது) என்னும் இளைஞர் புகையிலை கன்றுகளுக்கு பொலிடோல் தெளித்துக்கொண்டிருக்கும்போது திடீரென மயக்கமுற்று விழ்ந்தார். மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அரை மணி நேரத்தில் மரணமானார். இவர் 25 தரம் கிருமிநாசினியைத் தொடர்ந்து தெளித்துக்கொண்டிருந்ததாலேயே இவ்விதம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. மரண விசாரணையின்பின் விபத்தில் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## "தொழிற்சாலைகளை ஆரம்பியுங்கள்"

சாவகச்சேரி, வியா.

"தமிழினத்திற்குச் சாபக்கேடான இக்காலத்தில் பலர் வேலையின்றித் திண்டாடுகின்றனர். உத்தியோகம் பார்க்கும் காலம் மாறி விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் தமிழர் அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். பணம் படைத்த முதலாளிகள் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து நாட்டிலிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்க முன்வருவது நமக்கும் நாட்டிற்கும் செய்யும் பேருதவியாகும்".

இவ்வாறு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டீ. சிவகுரு ஒரு புகைப்படத் தொழிற்சாலையை சாவகச்சேரியில் ஆரம்பித்துப்பேசுகையில் கூறினார்.

## மானிப்பாய் பட்டினசபை

### சோலைவரி உயர்வு

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் பட்டினசபையினால் சென்ற ஆண்டு முடிவுவரை 6 வீதம் அறவிடப்பட்ட சோலைவரி இவ்வாண்டு 9 வீதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது.

மிகக் குறைந்த வருமானம் கிடைப்பதால் செலவினங்களுக்கும் வாங்கிய கடன்கள் செலுத்துவதற்கும் போதிய பணம் இல்லாததால், ஸ்தலஸ்தாபன சேவைச்சபையின் கேள்விப்படி மானிப்பாய் பட்டினசபை 6 வீதம் அறவிட்டு வந்த சோலைவரியை 9 வீதமாகக் கூட்டுவதாகத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஜனவரி மாதம் 1ம் திகதியிலிருந்து இத்தீர்மானம் அமுல் நடத்தப்படுமெனத் தெரிகிறது.

## உள்ளூராட்சியும் எம். பி. க்களும்

நாவலப்பிட்டி, வியாழன்

'தன்னை ஜனநாயக அரசாங்கம் என்று கூறிக்கொள்ளும் இந்த அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை நசுக்க முயற்சிக்கிறது. உண்மையைச் சொல்லப் போனால் இலங்கையில் உள்ளூராட்சி இல்லை. உள்ளூர் அரசாங்கம் இங்கு சிரிப்புக்கிடமாகவே உள்ளது' என்று நாவலப்பிட்டி நகரசபையின் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. ஆர். ஈ. ஜெயதிலகா தெரிவித்தார்.

திரு. ஜெயதிலகா மேலும் பேசுகையில குறிப்பிட்டதாவது:

"ஊர் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களுக்கும் உள்ளூராட்சி சபை தலைவரையே கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் இங்கு அந்தப் பகுதி எம். பி. யையே கலந்தாலோசிக்கிறார்கள். ஒரு உள்ளூராட்சி சபையில் அங்கத்தவராக இருப்பவர் மற்றொரு உள்ளூராட்சிசபையில் அங்கத்தவராக இருக்கக்கூடாது என விதித்திருக்கும் அரசாங்கம் எம்.பி.க்கள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களாய் இருப்பதை ஏன் தடைசெய்யக் கூடாது"

## ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னைநாள் உதவி மேயரும் நல்லூர வட்டார அங்கத்தவருமான திரு. ஆ. துரைராஜசிங்கம் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புதிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

அக்கரைப்பற்று, வியாழன்

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த வரப்பத்தன்சேனைக் கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்களுக்குத் தனிமையான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்று பொத்துவில் எம். பி. ஜனாப் எம். ஏ. அப்துல்மஜீதுக்கு மகஜர் சமர்ப்பித்திருந்தார்கள். இதை தொடர்ந்து ஜனாப் அப்துல் மஜீது கூட்டுறவு இலாகா உயர்தர அதிகாரிகளைப் பேட்டிகண்டு நடத்திய பேச்சுவார்த்தையின்பேரில் வரப்பத்தன்சேனைக் கிராமத்துக்குத் தனிமையான ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் திறப்பதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் அடுத்த மாத முற்பகுதியில் திறந்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வீடு தீக்கிரை

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை மேற்கு வாசியான சண்முகம் சுந்தரம்பிள்ளைக்குச் சொந்தமான வீடு ஒன்று நேற்று நண்பகல் தீப்பிடித்து எரிந்துவிட்டது.

எரிந்த வீட்டினுள் நித்திரை செய்துகொண்டிருந்த ஏழு வயதுச் சிறுமியும் அவர் சகோதரரான சிறு பையனும் 'தீ' விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

சரவணைக் கிராமசேவையாளர் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

# சிறுபான்மையினர் உரிமை பற்றிக் கருத்தரங்கு

## ஐ. நா. சங்கம் தீர்மானம்

மானிப்பாய், வியாழன்

"சிறுபான்மையினர் உரிமைப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. அது நிரந்தரமாகவும், சுமுகமாகவும் தீர்க்கப்படவேண்டுமானால் அது கட்சி அரசியலுக்கப்பால் ஆராயப்படவேண்டும்" என்று சமூகஜோதி கேட்முதலியார் தியாகராஜா யாழ்ப்பாண மாவட்ட ஐ. நா. சங்கக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

மானிப்பாயில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தியாகராஜா மேலும் பேசுகையில் சிறுபான்மையினர் பிரச்னையை கட்சி அரசியலுக்கப்பால் எடுக்கவும், அதற்குத் தீர்வு காண வழிவகைகளை மேற்கொள்ளவும் அரசாங்கம் முயற்சிசெய்துளளது வரவேற்கத்தக்க நல்ல அறிகுறியாகும் என்றார்.

திரு. எஸ். சிவனேசன் பேசுகையில் சிறுபான்மையினர் பிரச்னை சம்பந்தமாக விவாதிக்க ஐ. நா. சங்கம் ஒரு கருத்தரங்கு நடத்தவேண்டும் என்றார்.

திரு. எஸ். முத்துக்குமாரசாமி பேசுகையில் சிறுபான்மையினர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் ஐ. நா. தீவிரமாக ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சிறுபான்மையினர் உரிமை சம்பந்தமாகக் கருத்தரங்கு ஒன்று நடத்துவதெனவும், எதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி அத்தியாவசியம்

## நிபுணர் குழு அபிப்பிராயம்

கொழும்பு, வியாழன்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு காங்கேசன் துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது அத்தியாவசியமானது என்றும் இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யாது காலி துறைமுகத்தை மட்டும் அபிவிருத்தி செய்வதால் அதிக பயனடையமுடியாதென்றும் தேசிய திட்ட நிபுணர்கள் இலங்கைக்கு ஐ.நா.வால் அனுப்பப்பட்ட நிபுணர் பேராசிரியர் கோஷ்ஷிடம் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யாமல் தடைசெய்து வைப்பது சீமெந்து கூட்டுறவுஸ்தாபனத்தின் லாபத்தைப் பாதிக்குமெனவும் இதனால் நாட்டின் வருமானமே வீழ்ச்சியடையும் எனவும் அந்த நிபுணர்குழு பேராசிரியரிடம் தெரிவித்துள்ளது. காங்கேசன் துறை, காலி ஆகிய இரு இடங்களிலும் சீமெந்து தொழிற்சாலைகளை நிறுவிக் கொண்டு காலி துறைமுகத்தை மட்டும் அபிவிருத்தி செய்து முடிப்பதால் அதிக நன்மை அடைய முடியாது எனவும் அந்த நிபுணர் குழு பேராசிரியர் கோஷ்ஷிடம தெரிவித்துள்ளது.

காங்கேசன் துறை, காலி, புத்தளம் ஆகிய இடங்களில் சீமெந்து தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் 1966-ம் ஆண்டுக்கிடையில் சுயதேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் வருடமொன்றுக்கு 500,000 தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்படலாம் எனவும் நிபுணர்குழு தெரிவித்துள்ளது. இம்மூன்று தொழிற்சாலையின் அபிவிருத்திகளுக்காகவும் இதுவரைபெருந்தொகையான பணம செலவு செய்யப்பட்டதாகவும் இனிமேல் எதையாவது நிறுத்தி வைப்பதென்பது பொருளாதாரத்தை வீணடிப்பதாகவே இருக்குமென்றும் மேலும்அந்த நிபுணர்குழு தெரிவிததுள்ளது. முன் குறிப்பிட்ட உற்பத்தி எல்லையை அடைய வேண்டுமானால் உற்பத்திச் செலவுகள குறைய ஏற்றுமதி இறக்குமதி வசதிகள் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் எனவும நிபுணர்கள் தெரிவிததுள்ளனர். இந்திய உற்பத்தி செலவுகளைவிட இலங்கையின் சீமெந்து உற்பத்திச் செலவுகள அதிகமாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்தில் அரைப்பகுதிக்குமேல் இப்பொழுது தென்மாகாணத்துக்குப் புகையிரதம்மூலம் ஏற்றப்படுவதாயும் தொழிற்சாலை உற்பத்தி எல்லையை அடையும் போது அதில் 75 சதவிகிதம் தென்மாகாணத்துக்கே ஏற்றுமதி செய்யப்படும் எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். இப்பொழுது சீமெந்து வாங்குபவர் ஒரு அந்தருக்குக் கொடுக்கும் பணத்தில் புகையிரத போககுவரத்துக்காக (அதாவது பொருட்களை தொழிற்சாலைக்கு கொண்டு வரவும் தயாரிக்கப்பட்ட சீமெந்தை ஏற்றிக் கொண்டு பிற இடங்களுக்கு செல்வதற்காகவும்) மட்டும் சராசரி 2 ரூபா 50 சதத்தை கொடுக்கவேண்டியுள்ளதென்றும் காங்கேசன் துறை முறைமுகத்தை அபிவிருத்தி செய்து கப்பல் போக்குவரத்து வசதியை உபயோகித்தால் குறைந்த விலைக்கே சீமெந்தை விற்பனை செய்யலாம் எனவும் நிபுணர்கள் பேராசிரியர் கொஷ்ஷிடம் தெரிவித்துள்ளனர். காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களை கப்பல் மூலம் இறக்குவதால் வருடமொன்றுக்கு 45 லட்சம் ரூபா மிசச்ப்படுத்தலாம் எனவும் அவர்கள தெரிவித்துள்ளனர்.

காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதால் சீமெந்து தொழிற்சாலைக்கு மட்டும் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் முக்கிய உணவுப் பொருட்கள் கொண்டுவரும் கப்பல்களை அங்கே திருப்பிவிடுவதன்மூலம் அதிக பணம் மிச்சமாகும் எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## நத்தை வேகத்தில் இறக்குமதி!

கொழும்பு, வியாழன்

கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் அவ்வளவு துரிதமாக நடைபெறவில்லையென்று கப்பல் ஏஜண்டுகள், துறைமுக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். அத்தியாவசிய உணவுப் பொருட்களை விரைவாக இறக்கப்படாமையால் பல கப்பல்கள் பல நாட்களாக 'கியூ' வரிசையில் காத்து நிற்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

துறைமுக நிர்வாகம் இறக்குமதிவேலைகளைத் துரிதப்படுத்த எவ்வித நடவடிக்கை எடுத்தபோதிலும் இறக்குமதி வேலை ஆறுதலாகவே நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

## எதிரி விடுதலை

பருத்தித்துறை, வியாழன்

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த சித்தர் ஆழ்வார் என்பவர் வீட்டில் கடந்த ஆண்டு மே மாதம் 11-ம் திகதி தங்கநகைகளையும் 4750 ரூபா ரொக்கத்தையும் திருடியதாக அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னன் செல்லன் என்பவர் மீது பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

போதிய சாட்சியங்கள் இல்லாமையால் வழக்கை மேற்கோர்ட்டிற்குப் பாரப்படுத்த இயலாதெனத் தெரிவித்த நீதிபதி எதிரியை விடுதலை செய்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தைப் பங்குனி மாத இறுதியில் நடாத்துவதெனச் சங்க நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

வடமராட்சி மத்திய ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. இ. பாக்கியநாதர் தலைமைவகித்தார்.

## ரூ. 500 அபராதம்

அவிசாவலை, வியாழன்

சட்டவிரோதமாக தயாரித்த நூறு போத்தல் 'சைடர்' வைத்திருந்ததாக மகரவைச் சேர்ந்த ஜி.ஏ.சிறிசேனமீது சப் இன்ஸ்பெக்டர் ஆர்.ஏ.ஏ.ரணதுங்காவினால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு அவிசாவலை மாஜிஸ்திரேட் திரு. கி. எல். ரி. முனமல்லே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி 500 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## நீதிபதிகள் இடமாற்றம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. பி. ஏ. டீ. எஸ். சேனரத்ன கண்டி மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவிசாவலை மாவட்ட நீதிபதி திரு. ஏ. ஈ. ஆர். கொரியா, கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழ் வர்த்தகப் பயிற்சி மாணவர்கள் ஏமாற்றம்?

1963-ம் ஆண்டு ஆசிரிய கலாசாலை விசேடபயிற்சிகளின் கீழ் நடைபெற்ற தமிழ் வர்த்தக பரீட்சைக்கு ஆசிரியர்களாக உள்ளவர்களை மாத்திரம் அனுமதித்திருந்தார்கள். அதே சமயத்தில் சிங்களப் பரீட்சைக்கு மாணவரும் அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இம்முறையும் இதேபோன்று 14-2-64ல் வெளியான வர்த்தமானியில் வர்த்தக பாடத்திற்குரிய விளுப்பத்திரம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மாத்திரம் தயாரிக்கப்பட்டுப் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனுல் இம்முறையும் தமிழ் மொழி மூலம் கல்விபயின்ற வர்த்தக மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியாதவர்களாகவிருக்கின்றுர்கள். பொது விவேகம், கணிதம், விஞ்ஞானம், கைப்பணி ஆகிய மற்றய பாடங்களுக்குரிய விளுப்பத்திரங்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுப் பரீட்சை நடைபெறுமெனவும், வர்த்தக பாடத்திற்குரிய விளுப்பத்திரம் மாத்திரம் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தயாரித்து பரீட்சை நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டிருப்பது வியப்பாகவேயிருக்கின்றது.

தமிழ் மாணவர்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றத்துக்குள்ளாக்காது, இம்முறையாவது மற்றய மாணவர்களுக்குள்ள அதே உரிமையை தமிழ் மாணவர்களுக்கும் தந்து, தமிழ் மொழி மூலமும் வர்த்தகப் பரீட்சைப் பாடத்தை நடாத்த வழிசெய்து தமிழ் மாணவர்களின் குறையைப் போக்குமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்கிறேம்.

ஆ. மகாதேவா.
சுவர்ணசைத்தியரோட்,
கொழும்பு.

## மௌனம் ஏன்?

நெடுந்தீவு மத்தியில் சுமார் நான்கு வருடங்களுக்கு முன் புனித அன்னம்மா பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று 5 ஆசிரியர்களையும் 100-க்கு மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. இப்பாடசாலையை சுமார் 1 வருடத்துக்கு முன் அரசாங்கம் பொறுப்பேற்று வரவு இடாப்பு வழங்கியும் உபகரணம் கொடுத்தும் வந்துள்ளது. ஆனல் அப்பாடசாலையில் ஆசிரியர் நியமனமோ, சம்பளமோ, வழங்கப்படாதது வேதனைக்குரியது. இக்குறுகிய காலத்தில் இப்பாடசாலை கூடிய மதிப்பை பலராலும் பெற்று வந்துள்ளது. எனவே அரசாங்கம், ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கவும் மாணவர்களுக்கு பால், பணிஸ் கொடுக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சி. எஸ். பெனடிற் ஜீவா.
நெடுந்தீவு.

## மானிப்பாய் பட்டினசபை

மானிப்பாய் பட்டினசபை சோலைவரியை நான்கு சதவீதத்திலிருந்து ஒன்பது சதவீதமாக்க உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது. இவ்வித வரி உயர்வை மானிப்பாய் வரியிறுப்பாளர் வன்மையாக ஆட்சேபிப்பர்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து மக்கள் கஷ்டப்படும் இச்சமயத்தில் வரியை உயர்த்துவது சரியல்ல, இதை விட இன்னும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பலவுள. இப்பொழுதுள்ள வருமானத்தைக் கொண்டு நடத்தமுடியவில்லையானல் பட்டினசபை அந்தஸ்தைக் கிராமசபை அந்தஸ்துக்குக் குறைப்பதே நல்லது. வடபகுதியிலுள்ள கிராமசபைகளும் பட்டினசபைகளும் வட்டாரங்களை விஸ்தரித்துள்ளன. மானிப்பாய் பட்டினசபை இன்னும் வட்டாரங்களை விஸ்தரிக்கவில்லை. வட்டாரங்களை விஸ்தரிப்பதால் அபிவிருத்தியேற்படும்.

கே. எஸ். சௌந்தரநாயகம்'
மானிப்பாய்.

# காரசாரமான விவாதத்துடன் நடந்த பட்டின சபைக்கூட்டம்

## தலைவர் உப-தலைவர் 'மோதல்!'

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன் துறைப் பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் நேற்று பிற்பகல் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் "யேசு, நடராசர், புத்தர்" விக்கிரகங்கள் தலைவரை நோக்கி அங்கத்தவர்களுக்கு முன்னல் இருக்க ஆரம்பமாகியது. இப்படி இதற்கு முன்னர் ஒரு போதும் விக்கிரகங்கள் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தலைவர் ஆசனத்திற்கு வர சில விடிைகளுக்கு முன் இச் சிலைகளை உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்தி தான் கொண்டுவந்திருந்த கைப்பையிலிருந்து எடுத்து மேசையில் வைத்தார். தலைவர் ஆசனத்திற்கு வந்ததும் விக்கிரகங்களைப் பார்த்து ஆச்சரியமுற்றுர்.

நேற்றைய மாதாந்தக் கூட்டம் மிகக் காரசாரமாக நடந்தது. இக் கூட்டத்தில் பாவிக்காத சொற்கள் உபயோகிக்கப்பட்டன, ஒருவர் பேசும்போது மற்றவர்கள் குறுக்கிடுவதும் தலைவர் உட்காரச் சொல்வதும் பலர் ஒரு பிரேரணையை பிரேரிப்பதும் ஆமோதிப்பதும் சர்வசாதாரணமாக இருந்தது. ஒரு கட்டத்தில் ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. சிவனடியார் "பட்டினசபை கெட்டுவிட்டது" என்றுர்.

மாவிட்டபுரத்தில் உள்ள ஒரு பஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் ஒருவருக்கு சம்பளம் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்ற பிரேரணை வந்தபோது திரு. கிருபாமூர்த்தி தலைவரை நோக்கி கடும் சொற்களை பாவித்தார்.

ஒரு கட்டத்தில் உபதலைவர் தலைவரின் கட்டளைக்கு கிழ்ப்படிய மறுக்கவே தலைவர், உபதலைவரின் பெயரை மூன்று தடவை சொல்லி அமரும்படி கூறினர். உபதலைவர் அதற்கு மறுத்துவிட்டார். தலைவர் உபதலைவரைக் கூட்டத்தை விட்டு வெளியேறும்படி கேட்டார், அதற்கும் உபதலைவர் மறுத்துவிட்டார். இதன் பின் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்ட சில பிரேரணைகளுக்கு உபதலைவர் பாதகமாக வாக்களித்தார். இது பதிவுப்புத்தகத்தில் பதியப்படாததைக் கண்டு டாக்டர் சீனிவாசகம் உபதலைவரின் வாக்கு ஏன் பதியப்படவில்லையென்று வினவினர். இதற்கு தலைவர் பதிலளிக்கையில் உப தலைவரை கூட்டத்திலிருந்து வெளியேற்ற உத்தரவிடப்பட்டதெனவும் அதனுல் வாக்களிக்க முடியாது என்றுர். "அப்படியானுல் அவரை ஏன் பொலிசாரை அழைத்து வெளியேற்றவில்லை" என்று டாக்டர் சீனிவாசகம் கேட்டார்,

நேற்றைய கூட்டம் கூட்டப்பட்டது சட்டவிரோதம் என்பது உட்பட பல சட்டப் பிரச்சினைகளை திரு. கிருபாமூர்த்தியும், டாக்டர் சீனிவாசகமும் கிளப்பினர். அவற்றையெல்லாம் தலைவர் நிராகரித்தார்.

நேற்றைய கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளில் ஒரு சில ஏகமனதாகவும் மற்றவை திருவாளர்கள் கிருபாமூர்த்தி, சீனிவாசகம் ஆகியவர்களின் எதிர்ப்புடனும் நிறைவேறின.

# வானெலிநிகழ்ச்சிகள்

## வெள்ளி 21-2-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை. 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் – குமாரசாமி இரத்தினகோபால், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு-லக்ஷ்மிதேவி கிருஷ்ணர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 நாடகம்—சீதககாதி தந்தசெல்வம், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 மதிப்புரை, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்தி அஞ்சலி, 7-30 சிதம்பரம் டி. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 5-15 சிதம்பரம் டி. கிருஷ்ணமூர்த்திபிள்ளை-நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பொங்கிஎழும் பாரதம்—சித்திரம், 7-45 வாஸா கிருஷ்ணமூர்த்தி—வீணை, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்பட இசை.

# "சர்வாதிகாரத்தில் நமக்கு நம்பிக்கையில்லை"

## களுத்துறை வியாபாரிகள் சங்க கூட்டத்தில் உதவி மந்திரி

களுத்துறை, வியாழன்

"நாட்டிலேதேசிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள இந்தநேரத்திலே டாக்டர் தகநாயக்கா தனது கோமாளித்தனத்தால் இந்நாட்டிலுள்ள மக்களை தவறுன வழிக்கு அழைத்துச்செல்கிறுர். அவரோ அல்லது நாட்டு மக்களோ கோமாளித்தனத்தால் பயனடையப்போவதில்லை" என்று வர்த்தக உதவி மந்திரி திரு. டயஸ் ரி. பாஸ்கல் களுத்துறை நகர மண்டபத்தில் நடைபெற்ற வியாபாரிகள் சங்க கூட்டமொன்றில் பேசும்போது கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"டாக்டர் தகநாயக்கா தற்பொழுது மக்களின் சிரிப்பிற்கிடமான ஒரு மனிதராகிவிட்டார். நாட்டு மக்களின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் தற்பொழுது மக்கள் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நாட்டுமக்களை மேலும் கடனளிகளாக்க சுதந்திர கட்சி அரசாங்கம் விரும்பவில்லை. அதனுல்தான் தற்பொழுதுள்ள நிலைமையிலிருந்து விடுபட சில நடவடிக்கைகளை எடுத்துவருகிறேம்.

தனிப்பட்ட வியாபாரிகளை கஷ்டப்படுத்த அரசாங்கம் விரும்பவில்லை. நாட்டின் பிரச்சினைகளை சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஜனநாயக முறைப்படி தீர்க்க பாடுபட்டுவருகிறது. சர்வாதிகாரத்தில் சுதந்திரக்கட்சி அரசாங்கத்திற்கு நம்பிக்கையில்லை. ஆட்சிக்கு வரும் எந்த அரசியல் கட்சியும் இப்படியான பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டியிருக்கும். ஆதலால் பொறுமையோடு இருக்கும்படி மக்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வெள்ளிக்கிழமை மாலை 6-45 மணிமுதல் 8 மணிவரை அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரால் நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் ஆசிரியர் திரு. த. சுப்பிரமணியம் 'சமய வாழ்வு' என்னும் பொருள் பற்றியும் சைவசமய அபிவிருத்திச்சங்க ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தில் பகல் 12-30 மணி முதல் 1-30 மணிவரை ஆசிரியை ஸ்ரீமதி குணசுந்தரி 'பட்டினத்துப் பிள்ளையாரின் மகிமை' என்னும் பொருள்பற்றியும், சங்கத்தினரால் வண்ணை வைத்திஸ்வரன் தேவஸ்தான காவலரின் ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அன்று மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஆசிரியை செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை 'இறைவழிபாடு' என்னும் பொருள்பற்றியும், சங்கச் சைவ இளைஞர்மன்ற ஆதரவில் நல்லூர் கிழக்கு மூத்த விநயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'இறை வழிபாடு' என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாலே நடத்தப்படும் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள், வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 22-2-64 சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு ஆரம்பமாகும். ஆற்றலும் அநுபவமுமுள்ள ஆசிரியர்கள் படிப்பிப்பார்கள். வகுப்புக்களிற் சேரவிரும்புவோர் சேர்ந்துகொள்ளலாம்.

ஆர். எஸ். பாமர்
காரியதரிசி,
யா. ஆ. தி. பா. சங்கம்.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
18—2—64

1789

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

(1) யாழ்ப்பாண மாநகர சபையின் மராமத்து பகுதிக்கு இரும்புச் சாமான்கள் விநியோகம்செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 6-3-64 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) மாநகரசபை ஆணையாளர், நகரமண்டபம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலிருந்து 4-3-64 பிற்பகல் 3 மணிவரை பெறக்கூடிய படிவங்களிலேயே நிரப்பப்படல் வேண்டும்.

(3) கேள்விகள் இரு பிரதிகளில் அனுப்பப்படல்வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரக் கடித உறையின் இடதுபக்கத்திலும் "இரும்புச் சாமான்கள் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிடப்படவேண்டும்.

(4) கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். உள்ளூர் கேள்விதாரர் இம்முறையில் அனுப்பவிரும்பாவிடில், அவரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேர்முகமாக அரக்குமுத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரத்தை (3-ம் பந்தியில் காட்டப்பட்ட முறைப்படி உறையில் கேள்விதாரரின் பெயர் விலாசத்துடன்) இதைப் பெறும் அதிகாரமுடைய கீழ்க் கையொப்பம் இட்டவரிடம் கொடுக்கலாம்.

(5) கிழமை நாட்களில் கந்தோர் நேரத்தில் காலை 9-30க்கும், மாலை 3-00 மணிக்கும் இடையிலும் சனிக்கிழமைகளில் காலை 9-30 தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரையிலும் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ 50/-ம், கேள்விப்பத்திரத்திற்குரிய பணம் ரூ 5/-ம் கந்தோரில் கட்டவேண்டும். அதற்குப் பற்றுச்சீட்டு கொடுக்கப்படும். கேள்விப் பத்திரத்திற்குரிய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

(6) குறிப்பிட்டபடி மாதிரிகள் அனுப்பப்படல்வேண்டும்.

(7) மேலும் விபரம் பெற விரும்புவோர் கீழ்க் கையொப்பம் இட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஹட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளருக்காக,
யாழ்ப்பாணம்,

மாநகரசபைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.
18-2-64. 1793

சரி விளம்பரம்

ஸ்ரீ சரவணபவான் கபே
சுன்னுகம்

சுத்தமான – சுவையான – சத்துள்ள சிற்றுண்டி – போசனம்–பானங்கள் கிடைக்கும். 19υ9

காணவில்லை

4-2-64 காலை 6 மணியளவில் 3-ம் குறுக்குத்தெரு, டயரும்ஸ் சந்தி, பிரதான வீதி, மணிக்கூட்டடி ரூேட்டால் பஸ்நிலையத்திற்கு வந்து ஊர்காவற்றுறை பஸ்ஸில் புளியங்கூடல் சந்திக்கு வரும்பொழுது 17 பவுண் எடையுள்ள ஒரு தாலிக்கொடி தவறிப்போய் விட்டது. இதைப்பற்றி ஏதாவது தகவல் தருகிறவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கப்படும்.

C/o "ஈழநாடு". 1979

விற்பனைக்கு

நான்கு ரூைதை பூட்டிய கண்ணுடிக்கூட்டு தன்ணுவண்டி விற்பனைக்கு இருக்கின்றது. கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் சந்தியுங்கள், M. சந்திரன், 73, கார்மெல்ரோட்டு, குருநகர், யாழ்ப்பாணம். 1980

## ரூ. 80 அபராதம்

பருத்தித்துறை, வியாழன்

உத்தரவின்றி வடி சாராயம் வைத்திருந்ததாக கெருடாவிலைச் சேர்ந்த மயிலன் வல்லி என்பவர் மீது வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் எதிரிக்கு 80 ரூபாய் அபராதம் விதித்தார்.

# மன்னர் மகாவித்தியாலய அதிபர் மீண்டும் மாற்றம்

## இதை ஆட்சேபித்து வகுப்புக்களை மாணவர் பகிஷ்கரிக்கின்றனர்

எருக்கலம்பிட்டி, வியாழன்

மன்னர் மகாவித்தியாலய அதிபர் மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வித்தியாலய மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லாது பகிஷ்கரித்து வருகின்றனர்.

மன்னர் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய ஜனப் எம். எம். மஹிரூர் காத்தான்குடி மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்துக்கு ஜனப் செயினுலாப் தீன் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனப் செயினுலாப் தீன் இம்மாதம் 17-ந் திகதி தமது பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

சமீபத்தில் ஜனப் செயினுலாப்தீன் வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டு பதவி ஏற்க வந்தபொழுது மாணவர்கள் அதை எதிர்த்து பாடசாலைக்கு வெளியே சத்தியாக்கிரகம் செய்ததும் அதைத் தொடர்ந்து இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டதும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கும்.

ஜனப் செயினுலாப்தீன் இப்பொழுது மீண்டும் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். தங்களுக்கு ஒரு பட்டதாரி ஆசிரியரே அதிபராக நியமிக்கப்படவேண்டுமென்று கோரி மாணவர்கள் இப்பொழுது ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஆசிரியர்கள் வகுப்புக்களுக்குச் செல்வதும் மாலையில் வீடு திரும்புவதுமாக உள்ளனர்.

### சர்வதேச பொலிஸ் உதவி கோரப்பட்டுள்ளது

கொழும்பு, வியாழன்

பல பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கு வந்துசேரவேண்டிய வெளிநாட்டுச் செக்குகள் சமீபகாலமாக மாயமாக மறைந்து வந்தன. இச் செக்குகள் சுவிஸ் வங்கியொன்றில் மறைமுகமான பெயரில் செலுத்தப்பட்டிருந்தது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிப்பதில் இலங்கை இரகசிய பொலிஸ் சர்வதேச பொலிஸ்படையின் உதவியைக்கோரியுள்ளது. வெளிநாட்டு செக்குகள், வங்கி உண்டியல்கள் ஆகியவற்றைகுறிப்பிட்டஒரு கோஷ்டியினரே மோசடிசெய்துவருவதாக பொலிசார் நம்புகின்றனர்.

### 16 பேர் தீக்குப்பலி

ரய்ச்சூர் (மைசூர்), பெப். 20

இங்கிருந்து 18 மைல் தூரத்திலுள்ள ஒரு பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்கு ஜனக்கூட்டம் ஒன்று தீ வைத்ததால் 16 பேர் எரிந்து, கருகிச் செத்தனர்.

### பதில் நீதிபதி

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் சுமார் ஒரு மாதகால விடுமுறையில் கேரளம் சென்றிருப்பதால்அக் காலத்திற்கு பருத்தித்துறை நீதிபதியாக திரு. பி. ஆர். டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.


4-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (ஹட்டன்)

நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி டி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஜானகி — பி. எஸ். கோவிந்தன் நடித்த

1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-1ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இறுதி ஆட்டத்தில் இந்தியா 347—3

# ஐந்து கிரிக்கெட் டெஸ்டுகளும் வெற்றி தோல்வியின்றி முடிவு

## நட்கார்ணி ஆட்டமிழக்காமல் 122 ஓட்டங்கள் எடுத்தார்

கான்பூர், பெப். 20

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இன்று கான்பூரில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்திய கோஷ்டி எதிர்பாராத வகையில் துரிதமாக ஓட்டங்களை எடுத்து இறுதியில் எவருக்கும் வெற்றி தோல்வி கிடைக்காத வகையில் போட்டியை முடித்துக்கொண்டது. இரு கோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற ஐந்து டெஸ்ட்டுகளும் சமனாகவே முடிவுற்றது.

ஐந்தாவதும் இறுதியானதுமான கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 559 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 266 ஓட்டங்கள் பெறவே, இந்தியாவே தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை விளையாட நேர்ந்தது. இந்தியா தனது இரண்டாவது இன்னிஸில், ஆட்டநேர இறுதிவரை 3 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 347 ஓட்டங்கள் எடுத்தது.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில், நட்கார்ணி சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காமல் 122 ஓட்டங்கள் எடுத்தது கிரிக்கெட் பிரியர்களுக்கு நல் விருந்தாக இருந்தது. நட்கார்ணி இம்முறைதான் 100 ஓட்டங்களுக்கு மேலெடுத்தார்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, புதுடில்லி, கான்பூர் ஆகிய நகரங்களில் முறையே நடைபெற்ற ஐந்து டெஸ்டுகளும் எவருக்கும்வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்திய கோஷ்டியை சேர்ந்த காப்டன் பட்டாடி நவாப் 4-வது கிரிக்கெட் டெஸ்டில் ஆட்டமிழக்காமல் 203 ஓட்டங்கள் எடுத்ததும், புதுடில்லி, சென்னை ஆகிய நகரங்களில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டில் குந்தரம் முறையே 100, 192 ஓட்டங்கள் எடுத்தது கிரிக்கெட் பிரியர்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். ஒரு இந்தியர் இரண்டு "செஞ்சரி" எடுத்தார் என்ற பெருமையை பட்டோடி தேடிக் கொடுத்துவிட்டார்!

# சர்வகட்சி மகாநாடு அடுத்த வாரம் கூடும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டுக்கு அடிப்படையாகவிருக்கும் தமிழரசுக் கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கையான ஐந்து அம்சத் திட்டங்கள் வருமாறு:- ★ பிரதேச (மாவட்ட) சபைகளை விரையில் அமைக்க வேண்டும். ★ ஆங்கிலத்தில் அல்லது தமிழில் அரசாங்க காரியாலயங்களுக்கு எழுதப்படும் கடிதங்களுக்கு அந்தந்த மொழிகளில் பதிலளிக்க வசதி செய்யப்படவேண்டும். ★ சிங்களத்தில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களினதும், அரசாங்க ஊழியரினதும் சம்பளப் பட்டியல், காசோலைகள் ஆங்கிலத்தில் அல்லது தமிழில் தயாரிக்கப்படவேண்டும். ★ பல்கலைக்கழகக் கல்விவரை தமிழ் மாணவர்கள் தமிழ்மொழி மூலம் கல்வி அளிக்கப்படவேண்டும். ★ தமிழ் பேசும் பகுதிகளில் மேலும் தமிழ் அரசாங்க ஊழியர்களை நியமிக்கவேண்டும்.

அரசியல் கட்சித் தலைவர்களுடன் மந்திரிகள் பலரும் இந்த வட்டமேசை மகாநாடுபற்றி நடத்திய ஆலோசனையில் மகாநாட்டுக்குப் பொதுவாக ஆதரவு கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது. பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, திரு. பிலிப் குணவர்த்தன, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. கே. எம். பி. ராஜரத்தின ஆகியோருடன் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களும் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வட்டமேசை மகாநாடு குறித்து இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர் டாக்டர் என். எம். பெரரா தெரிவித்துள்ளதாவது:

"சர்வகட்சி மகாநாடு கூடும் யோசனையை எனது கட்சி வரவேற்கிறது. இவ்வித மகாநாடு கூட்டுவதனுல் சில நன்மைகள் பெறலாம்"

யு. என். பி. அங்கத்தவரும் சிரேஷ்ட எம். பி. யுமான திரு. ஏ. ரத்னயக்கா அபிப்பிராயம் தெரிவிக்கையில், திரு டட்லி சேனநாயக்கா மொழிப்பிரச்னை பற்றி விவாதிக்க இவ்விதவட்டமேசை மகாநாடு கூட்டவேண்டுமென முன்னர் யோசனைதெரிவித்திருந்தாரென்றும் மந்திரிசபையின் தீர்மானத்தைத்தாம் வரவேற்பதாகவும் கூறினர்.

# கால்சட்டைக்காரர்களுக்கு "கியூ" வரிசை இல்லை!

## யாழ். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் மற்றுமொரு சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கூப்பன் ஒன்றிற்கு நாலு யார் துணி பெறுவதற்காக மணித்தியாலக் கணக்கில் கியுவில் பெண்களும் வயோதிபரும் உட்பட நூற்றுக்கணக்கானோர் கடும் வெயிலில் பொறுமையுடன் காத்துநிற்கும்போது கடைசியாக வந்த சில கால்சட்டைக்காரர்களை மட்டும் கியூவில் நிற்கவைக்காமல் நேரே உள்ளே அனுமதித்த சம்பவம் நேற்று காலை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் நடந்தபொழுது அங்கே கடமையாற்றிய பொலிசாரும் பராமுகமாக இருந்தார்கள்.

### பெண் மயக்கமுற்ருர்

நீண்ட நேரம் கியூவில் நின்ற காரணத்தால் ஒரு பெண் மயக்கமுற்று மூன்ருவது படியிலிருந்து நிலத்தில் விழுந்தபோது, அங்கு கியூவில் நின்ற மற்றப் பெண்கள் முதல் உதவியளித்தார்கள். இந்நிகழ்ச்சி நடைபெற்ற சிறிது நிமிடத்தின்பின், சைக்கிளில் வந்த ஒரு ஓய்வு பெற்ற பொலிஸ் கான்ஸ்டபின் கியூவில் நிற்காமல் நேரடியாக உள்ளே சென்று தமக்குத் தேவையான துணிகளை வாங்கிச் சென்ருர். இதுபற்றி கியூவரிசையில் நின்றவர்கள் குரல் எழுப்பியும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

மத்தியான போசனத்திற்காக ஸ்தாபனம் மூடப்படும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கும் சமயம் பெண்களும் ஆண்களுமாக நூற்றுக்கு அதிகமானோர் கியூவரிசையில் காத்து நின்றபோது, கியூவின் கடைசியில் நின்ற கால்சட்டை அணிந்த இருவரை ஸ்தாபன ஊழியர் ஒருவர் அழைத்து அவரின் கூப்பனையும் பணத்தையும் பெற்றுக்கொண்டு அவரை வெளியே போய் நிற்கும்படியும், தான் சீலையை அனுப்பி வைப்பதாகவும் கூறினர். இதன்பின் ஸ்தாபன ஊழியர் தானே முயற்சி எடுத்து வெளியில் காத்து நின்ற கால்சட்டைக்காரருக்கு 8 யார் வெள்ளை பப்ளின் துணியை ஒரு தொழிலாளி மூலம் அனுப்பிவைத்தார்.

இதுசம்பந்தமாக நமது நிருபர் ஒரு ஸ்தாபன ஊழியரைக் கேட்டபோது, அவர் கால்சட்டைக்காரர் கியூவில் நீண்ட நேரம் நிற்க வெட்கப்படுவதாகவும், அவர் தங்களுக்குத் தெரிந்த ஒரு நண்பரென்றும் தெரிவித்தார்.

### வேலைவாய்ப்பு

#### திருத்தம்

கொழும்பு, வியாழன்

நேற்றைய 'ஈழநாடு' பதிப்பில் இலங்கை வங்கியில் கனிஷ்ட லிகிதர்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 18-ம் திகதியென தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. முடிவு திகதி இம்மாதம் 28-ம் திகதி.

### கைகலப்பில் இருவர் பலி

மாவிட்டபுரம், வியாழன்

வசாவிளானைச் சேர்ந்த குட்டியப்பிளத்தில் நேற்றிரவு இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இருவர் மரணமானுர்கள். ஐவர் படுகாயமுற்றனர். பாறிசீனியன், வைரவன் ராசன் ஆகிய இருவருமே மரணமானவர்கள்.

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எச் எஸ அத்துறுபான மரணவிசாரணை நடத்தினர். மேல்விசாரணை இம்மாதம் 28-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக காங்கேசன்துறை பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### உருவப்படத் திறப்புவிழா

அச்சுவேலி, வியாழன்

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களின் உருவப்படத் திறப்புவிழாவும், அவர் தொகுத்த 'சுப்பிரமணிய பிரதிஷ்டா விதி' என்னும் நூல் வெளியீடும் இம்மாதம் 23-ந் திகதி ஞாயிறுக்கிழமை மாலை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் விழாவை ஆரம்பித்துவைப்பார் என்றும், வடபகுதி பதில் உதவி வித்தியாதிபதி திரு சி. தணிகாசலம் குருக்களின் உருவப்படத்தைத் திறந்துவைப்பாரென்றும் அறிவிக்கப்படுகிறது.